**DEPOSITION OF WITNESS**

Judicial form No,53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI

| C.C. 53/2023 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.2/ கண்ணுற்ற சாட்சி |
| பெயர் | நாகராஜ் |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | சின்னான் |
| கணவர் பெயர் | |
| கிராமம்: பெரியூர் | ஜாதி : |
| தாலூக்கா : சத்தி | இனம் : |
| மாவட்டம் ஈரோடு | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 15.11.2023

All Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் நிரந்தரமாக குடியிருந்து கொண்டு தற்போது பெருமாநல்லூர் பாரத் பெட்ரோல் பங்க் அருகே தற்காலிகமாக குடியிருந்து கொண்டு எலெக்ட்ரீசியன் மற்றும் தோட்ட வேலை செய்து வருகிறேன். கடந்த 24.09.2022 ம் தேதி சந்திரசேகர் வீட்டில் இருந்த போது மதியம் சுமார் 12.00 – 01.00 மணியிருக்கும். ஒரு நபர் என்னிடம் சந்திரசேகர் வீட்டில் இருக்கிறாரா என்று கேட்டார் நான் இருக்கிறார் என்று சொன்னேன். அவரும் சந்திரசேகரும் வீட்டில் இருந்து கேட்டிற்கு வெளியே போனார்கள். இரண்டு நிமிடம் கழித்து நான் அவர்கள் பின்னால் சென்று பார்த்தேன். அப்போது நான்கு பேர் சந்திரசேகரின் தோள் பட்டையை பிடித்து காரின் உள்ளே தள்ளனிா்கள். நான் சந்திரசேகரின் மனைவியை சத்தம் போட்டு அழைத்தேன். அவரும் ஓடி வந்தார். நாங்கள் அவர்களை நிறுத்தி

பேசினோம். பிறகு காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தோம், போலீசார் வர தாமதம் ஆனதால் நாங்களே காவல் நிலையத்திற்கு சென்று எதிரிகளை ஒப்படைத்தோம். சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு நபர்களையும் தற்போது பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள். எதிரிகள் வெள்ளை நிற ஸ்விப்ட் காரில் வந்தார்கள். அதன் பதிவு எண். TN 19 BV 2562 ஆகும் . இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 மற்றும் 2 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் எங்கு வேலை பார்த்து வருகிறேன் என்றால் சந்திரசேகர் வீட்டில் எலெக்ட்ரீசியன் மற்றும் தோட்ட வேலை பார்த்து வருகிறேன். நான் அவர்கள் வீட்டில் எத்தனை வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன் என்றால் 1 1/2 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 வீட்டில் எத்தனை நபர்கள் வேலை செய்து வருகிறார்கள் என்றால் ஒரு பெண்மணி வீட்டு வேலை செய்து வருகிறார். நான் தோட்டத்து வேலையும் எலெக்ட்ரீசியன் வேலையும் செய்து வருகிறேன். அ.சா.1 வீட்டில் வாட்ச்மேன் உள்ளார் என்றால் சரிதான். முதல் விசாரணையில் போலீசாருக்கு தகவல் சொல்லப்பட்டுள்ளதாக கூறியுள்ளேன். யார் தகவல் சொன்னார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் அசா.1 ன் வீட்டில் வேலை செய்து வருவதால் நான் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் வீடியோ ரெக்கார்ட் உள்ளது அதை போலீசார் விசாரணையின் போது ஒப்படைத்தேனா என்றால் இல்லை. என்னிடம் அவ்வாறு எந்த ஆவணமும் இல்லை என்றும், அதனால் தான் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த போது சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நிலையில் அ.,சா.1 ன் வீட்டிற்கும் தோட்டத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 20 அடி தூரம் உள்ளது. நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் எங்கு எப்போது நடந்தது என்றால் அ.சா.1 ன் வீட்டிற்கு முன்னாடி நடந்தது. மேற்சொன்ன விபரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். முதல் விசாரணையில் நான்கு நபர்கள் வந்ததாக கூறியுள்ளேன்., அவர்கள் பெயர் தெரியாது.

அதன் முன்னர் பார்த்ததில்லை. போலீசார் விசாரணையில் இதற்கு முன்னர் எதிரிகளை பார்த்தது இல்லை என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். புகார் யார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. சந்திரசேகர் என்ற நபர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ள நிலையில் நான் சம்பவ இடத்திலேயே கிடையாது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரணையின் போது சந்திரசேகரின் மனைவியை அழைத்ததாக நான் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சந்திரசேகர் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையின் போது சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லப்படும் நபர்களின் அங்க அடையாளங்களோ, அல்லது உருவ அமைப்பு பற்றியோ குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் வந்த கேட்ட நபர் வெள்ளை வேட்டியும், வெள்ளை ஜிப்பாவும் அணிந்திருந்தார். நான் காவல் துறையினருக்கு தொலைபேசியின் மூலம் தகவல் சொன்ன போது, நேரம் சுமார் 12.00 – 01.00 மணியிருக்கும். காவல் துறையினர் வர தாமதமானது என்று நான் சொன்ன நிலையில் சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து காவல் நிலையம் சென்றோம் என்றால் நான் செல்லவில்லை. ஊர் மக்கள் தான் எதிரிகளை அழைத்துச் சொன்னார்கள். ( சாட்சி தானாக முன் வந்து இவ்விபரத்தை கூறுகிறார்.) போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மாலை 03.00 – 04.00 மணியிருக்கும். அப்போது என் வீட்டில் இருந்த போது விசாரித்தார்கள். நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் எழுதியதை நான் படித்து பார்த்து தான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் நான்கு நபர்கள் அ.சா.1 ஐ தோள் பட்டையை பிடித்து தள்ளியதாக நான் போலீசார் விசாரணையின் போது கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும், நான் அ.சா.1 ன் வீட்டில் வேலை செய்து வருவதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை எனக்கு தெரியாது என்றும், தற்போது நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்னர் காவல்

துறையினர் அடையாளம் காட்டியதால் தான் தற்போது கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.11.15 16:23:44 +0200

நீதித்துறை நடுவர்,
அவிநாசி.

Name of the Interpreter : K.S. Shabeena, Judicial Magistrate, Avinashi
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 15th day of November 2023

K S SHABEENA Digitally signed by K S SHABEENA Date: 2023.11.15 16:23:55 +0200

Judicial Magistrate, Avinashi
Signature of Interpreter.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial form No,53</u>

<u>(See Rule 42)</u>

<u>(Chapter XXIII Code of Criminal Procedure</u>

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| C.C. 53/2023 | |
|---|---|
| Deposition of Witness for | அ.சா.3/ கண்ணுற்ற சாட்சி |
| பெயர் | சங்கீதா |
| தொழில் | |
| தகப்பனார் பெயர் | |
| கணவர் பெயர் | சந்திரசேகர் |
| கிராமம்: பெருமாநல்லூர் | ஜாதி : |
| தாலூக்கா : அவினாசி | இனம் : |
| மாவட்டம் திருப்பூர் | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 15.11.2023

All Accused present.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு 4 வது வார்டு கவுன்சிலராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 என் கணவர். கடந்த 24.09.2022 ம் தேதி மதியம் 12.00 – 01.00 மணியிருக்கும். என் வீட்டின் பின்னால் உள்ள சமைலைறையில் இருந்தேன். அப்போது எங்கள் வீட்டில் வேலை செய்யும் நாகராஜ் ஓடி வந்து " மேடம் சீக்கிரம் வாங்க, ஒரு காரில் நான்கு பேர் சாரை உள்ளே ஏறச் சொல்லி தள்ளுகிறார்கள், அதில் யூனிபார்ம் போட்ட போலீசும் இருக்கிறார்" என்று சொன்னார். நான் எங்கே என்று கேட்ட போது முன்னால் கேட் அருகே என்று சொன்னார். நாங்கள் ஓடி வந்து பார்த்த போது, கூட்டமாக இருந்தது. என் கணவரிடம் என்ன நடந்தது என்று கேட்ட போது, சிஓபி ஆபிசிலிருந்து கூப்பிட்டதாக சொன்னார். ஆனால் நம்மளுடையது எஸ்.பி லிமிட் என்று சொன்னார். ஆஜர் நான்காம் எதிரி காருக்குள் உட்காந்திருந்தார். அவர் யூனிபார்மில் இருந்தார். மேலும் ஆஜர் 1,2 எதிரிகளை காருக்குள் உட்காந்திருந்தார்கள். ஆஜர் 3 வது எதிரி காரின் அருகே

நின்றிருந்தார். ஆஜர் 4ம் எதிரி விசாரிப்பதற்காக கூப்பிடுகிறோம் என்று சொன்னார். கூட்டம் சேர்ந்து விட்டதால் அவர்களை அழைத்துப் போய் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ம் மற்றும் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய மகன் மேகதீஸ்வரன் எத்தனை டாஸ்மாக் கடையை நடத்தி வருகிறார் என்றால் நாங்கள் எடுத்த கடையை என் மகன் பார்த்து வந்தார். டாஸ்மாக் கடைக்கான பொருட்களை 1வது எதிரியிடமிருந்து என் மகன் வாங்கி வந்தார் என்றால் சரிதான். அப்போது 1ம் எதிரி என்னிடம் என் மகன் கொடுக்க வேண்டிய பணத்தை கேட்டு வந்தார் என்றால் சரிதான். நாங்களும் அந்த பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாக கூறியிருந்தோம் என்றால் சரிதான். போலீசார் எங்களை எப்போது விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையம் சென்ற போது 24.09.2022ம் தேதியில் விசாரித்தார்கள். என் வீட்டிற்கு சிவராமன், ஜெயராமன் அடிக்கடி வருவார்கள் என்றால் சிவராமன் எங்களுக்கு ஆக்டிங் டிரைவராக வேலை செய்து வருகிறார். 24.09.2022ம் தேதி போலீசார் விசாரித்த பின்னர் எங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை. அ.சா.1, நான், சாட்சிகள் ஜெயராமன், சிவராமன் ஆகியோர் மீது பெருமாநல்லூர் காவல் நிலைய குற்ற எண். 186/2023 என்ற மோசடி வழக்கு ஒன்று உள்ளது என்றால் சரிதான். (ஆட்சேபணையுடன் பதிவு செய்யப்படுகிறது). அதே போல் ரத்தினராஜிற்கு கொடுக்க வேண்டிய பணத்தை ஏமாற்றுவதற்காகத்தான் இவ்வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் மற்றும் 2வது எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், நான் சொல்வது போல் எந்தவொரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**<u>3வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் தற்போது அ.இ.அ.தி.மு.க கட்சியில் கவுன்சிலராக பணியாற்றி வருகிறேன். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். என் கணவரை அழைத்துச் சென்றார்களா அல்லது அவராகவே சென்றாரா என்று பார்க்கவில்லை. சம்பவ சமயத்தில் என் கணவர் அழைத்துச் செல்லப்பட்டார் என்று தான் கூறியுள்ளேனே தவிர கடத்த முற்பட்டதாக கூறவில்லை. இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சாட்சிகள் அனைவரும் எங்களுக்கு தெரிந்தவர்கள் என்றால் சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தான் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். நான்

சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ரத்தினராஜை தவிர மற்ற நபர்களை சம்பவத்திற்கு முன்னர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு எத்தனை மணியளவில் சென்றேன் என்றால் சுமார் 01.30 முதல் 02.00 மணியளவில் சென்றேன். நான் சொன்ன விபரத்தை போலீசார் விசாரித்து எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான், அத்ன் பின்னர் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் பொது ஜனங்கள் அங்கு இருந்தாரகள் என்றால் சரிதான். அடையபாளம் அணிவகுப்பு நடத்தப்பட்டதா என்றால் இல்லை. சீருடை அணிந்து ஒரு நபர் வந்ததாக பின்னர் காவல் துறையினரிடம் ஆலோசித்து தற்போது பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகனுக்கும், 1ம் எதிரிக்கும் இடையே இருந்த பணப் பிரச்சனை சம்மந்தமாக அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக இவ்வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியின் கையொப்பம்

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் அவர் கூறியவாறு தட்டச்சு செய்யப்பட்டு அவரிடம் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையொப்பமிட்டார்.

K S SHABEENA
Digitally signed by K S SHABEENA
Date: 2023.11.15 16:24:22 +0200

நீதித்துறை நடுவர்,
அவிநாசி.

Name of the Interpreter : K.S. Shabeena, Judicial Magistrate, Avinashi
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 15th day of November 2023

K S SHABEENA
Digitally signed by K S SHABEENA
Date: 2023.11.15 16:24:29 +0200

Judicial Magistrate, Avinashi
Signature of Interpreter.